தின தமிழ்
ஒரு விரல் புரட்சி செய்வோம்!
நம் உரிமையை நிலைநாட்டுவோம்!
-இது நமக்கான தேர்தல்-
தேர்தல் நாள் ஏப்ரல் 23

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 23.04.2026 • மலர் 04 • இதழ்: 113
• Edition : Nagercoil • 23.04.2026 • Vol : 04 • Issue : 113 • Page : 4 • Rs. 5/-

## தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்:

# தமிழ்நாடின் அடுத்த முதல்வர் யார்? இன்று வாக்குப்பதிவு

## 4 முனை போட்டி....

சென்னை, ஏப். 23

தமிழக சட்டமன்ற தேர்தல் இன்று (வியாழன்) நடைபெற உள்ளது. இதையடுத்து மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் களத்தில் நிற்கின்றனர்.

தி.மு.க., அ.தி.மு.க., நாம் தமிழர், த.வெ.க. என 4 முனை போட்டி நிலவுகிறது. இந்த தேர்தலில் வெற்றி வாகை சூடுவதற்காக ஒவ்வொரு கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டன. தற்போது கோடையின் வெப்பம் அதிகமாக இருந்தாலும், தலைவர்கள்வேட்பாளர்களின் பிரசாரங்கள் அதனை விட அனல் கக்கியது.

இந்த தேர்தலில் தி.மு.க.. மீண்டும் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் களம் இறங்கி உள்ளது. முதல்அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் கடந்த 31ந்தேதி திருவாரூரில்தனது பிரசாரத்தை தொடங்கினார். தொடர்ந்து அவர் மாவட்டங்களில் பிரசாரம், பொதுக்கூட்டம், ரோடு ஷோ ஆகியவற்றில் கலந்துகொண்டு தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டிய நிலையில் நேற்று தனது பிரசாரத்தை தான் போட்டியிடும் கொளத்தூரில் நிறைவு செய்தார்.

மயிலாப்பூரில் தனது பிரசாரத்தை தொடங்கிய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சேலத்தில் தனது பிரசாரத்தை நிறைவு செய்தார்.

த.வெ.க. தலைவர் விஜய், தனது வேட்புமனுவை பெரம்பூரில் தாக்கல் செய்துவிட்டு, அங்கே பிரசாரத்தை தொடங்கி நேற்று சென்னை நந்தனத்தில் நிறைவு செய்தார். நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காரைக்குடியில் தனது பிரசாரத்தை நிறைவு செய்தார்.

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தர்மபுரியிலும், அ.ம.மு.க. தலைவர் டி.டி.வி.தினகரன்காரைக்குடி தொகுதியிலும், தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா தான் போட்டியிடும் விருத்தாசலம் தொகுதியிலும், விடுதலைச்சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் திருக்கோவிலூரிலும் தங்களது இறுதிக்கட்ட பிரசாரத்தை மேற்கொண்டனர். தஞ்சையில் திராவிடர் கழகதலைவர்கி.வீரமணியும், கும்பகோணத்தில் த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசனும் இறுதிகட்டபிரசாரத்தைநிறைவு செய்தனர்.

நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் 4,023 தகுதியுள்ள வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். அவர்களில் 3,579 பேர் ஆண்கள், 443 பேர் பெண்கள், ஒருவர் மூன்றாம் பாலினத்தவராகும்.

தமிழகத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை தற்போது 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். அவர்களில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள், 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவராகும்.

வாக்காளர் பட்டியல் தொடர்பான எஸ்.ஐ.ஆர். பணிகள் நிறைவடைந்த நிலையில், சுமார் 40 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டன. எனவே, ஏற்கனவே வாக்களித்து வருபவர்களே இந்த முறை வாக்களித்தாலும், தமிழகத்தின் வாக்கு சதவீதம் 85ஐ தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலை சுதந்திரமாக நடத்த தமிழகத்திற்கு 326 தேர்தல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் அனுப்பி வைத்துள்ளது. அவர்களில் 136 பேர் பொதுப் பார்வையாளர்கள், 40 பேர் போலீஸ் பார்வையாளர்கள், 150 பேர் செலவினப்பார்வையாளர்கள்.

இந்த தேர்தல் காலகட்டத்தில் பறக்கும் படையினரால் ரூ.1,200 கோடி மதிப்புள்ள பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

300 கம்பெனி துணை ராணுவத்தினரும், 1.20 லட்சம் தமிழக போலீசாரும் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தேர்தல் பணிகளுக்காக 3.60 லட்சம் அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மொத்தமுள்ள 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளில், வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்கை உறுதி செய்யும் 'விவிபாட்' எந்திரங்கள், கட்டுப்பாட்டு எந்திரம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இந்த எந்திரங்கள் அனைத்தும் நேற்று (புதன்கிழமை) காலை முதல் அந்தந்த வாக்குச் சாவடிகளுக்கு கொண்டு செல்லப்பட உள்ளன. இதற்காக தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவலகத்தில் இருந்து வாக்குப்பதிவு எந்திரங்கள், விவிபாட், கட்டுப்பாட்டு எந்திரங்கள் பாதுகாப்பாக வாகனங்களில்




எடுத்துச்செல்லப்படுகின்றன.

அவை அதற்கான வாக்குச்சாவடிகளில் நேற்று நிறுவப்படும். அந்தப் பணியை பெல் நிறுவன பொறியாளர்கள் மேற்கொள்வார்கள். அந்த வகையில் தமிழகத்தின் அனைத்து 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளுக்கும் நேற்று இந்த எந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டு நிறுவப்பட்டுவிடும்.

தேர்தல் பணியாளர்களுக்கு நேற்று இறுதிக்கட்ட பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் பயிற்சியை முடித்ததும் தேர்தல் பணிக்கான உத்தரவு வழங்கப்படும். அதை பெற்றுக்கொண்டு அந்தந்த வாக்குச்சாவடிக்கு இன்றே சென்றுவிடுவார்கள். நேற்று இரவில் அவர்கள் அங்குதான் தங்க வேண்டும்.

பெண் பணியாளர்கள் மட்டும் வீட்டுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் வாக்குப்பதிவு தொடங்குவதற்கு ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பே, அதாவது இன்று காலை 5.30 மணிக்கு முன்பே தங்களுக்கான வாக்குச்சாவடிகளுக்கு வந்துவிட வேண்டும்.

நேற்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறும். வாக்குப்பதிவு தொடங்க 1 மணி நேரத்திற்கு முன்பாக மாதிரி வாக்குப்பதிவு நடைபெறும். அப்போது வாக்குச்சாவடி தலைமை அலுவலர், மற்ற 3 அலுவலர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் இருப்பார்கள்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கு உள்ளேயும், வெளியேயும் சிசிடிவி வைக்கப்பட்டிருக்கும். அங்கு நடக்கும் வாக்குப்பதிவை நேரடியாக கண்காணிக்க 3 வகை கட்டுப்பாட்டு அறைகளை தேர்தல் கமிஷன் அமைத்துள்ளது.

அதன்படி, தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, தேர்தல் நடத்தும் அதிகாரி ஆகியோரின் கட்டுப்பாட்டில் வரும் வகையில் அவை அமைக்கப்பட்டுள்ளன. தலைமை தேர்தல் அதிகாரியின் கட்டுப்பாட்டில் வரும் அறை, சென்னை தலைமைச்செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

# வாக்களிக்க 12 ஆவணங்களை அடையாளமாக காட்டலாம்




சென்னை, ஏப். 23

தமிழகத்தில் இன்று (வியாழக்கிழமை) சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. வாக்களிப்பதற்கு வசதியாக, வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், 'இசிஐநெட்' இணையதளத்திற்கு சென்று, வாக்காளர்அடையாளஅட்டை எண்ணை பதிவு செய்தோஅல்லது பதிவு செய் யப்பட்ட செல்போன் எண்ணை வைத்தோ புதிய டிஜிட்டல் வாக்காளர் அட்டையை 'ஓ.டி.பி.' மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒருவேளை வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டாலும் ஆதார் உள்ளிட்ட 12 மாற்று ஆவணங்களைக்காட்டி வாக்களிக்கலாம்.

அதன் விவரம் பின்வருமாறு:

1.ஆதார் அட்டை

2.புகைப்படத்துடன்கூடிய வங்கி அல்லது தபால் கணக்குப் புத்தகங்கள்

3.மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை

4.தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டைஅல்லது ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை

5.ஓட்டுனர் உரிமம்

6.பான் கார்டு

7.தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலை மைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை

8. பாஸ்போர்ட்டு

9. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

10. மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட பொது நிறுனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்

11. நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற அல்லது சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை 12. மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தனித்துவமான ஊனமுற்றோர் அடையாள அட்டை. ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தி வாக்களிக்க லாம். பூத் சிலிப் என்ற வாக்காளர் தகவல் சீட்டு, வாக்களிப்பதற்கு செல்லத்தக்கதல்ல. வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாவிட்டால், இவற்றில் எந்த ஆவணத்தை வைத்தும் வாக்களிக்க முடியாது.

## தமிழக சட்டசபை தேர்தல் தொடர்பான நிகழ்வு

# பார்வையிட சென்னை வந்த 10 நாடுகளை சேர்ந்த சர்வதேச குழு




சென்னை, ஏப். 23

தமிழக அரசின் பதவிக் காலம்மேமாதம்10ந்தேதியுடன் நிறைவடைகிறது. இதனை அடுத்து, தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15ந்தேதி அறிவித்தது. இதன்படி, ஏப்ரல் 23ந்தேதி ஒரே கட்ட தேர்தலாக நடத்தி முடிக்கப்படும் என்றும் வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதனை முன்னிட்டு, அரசியல் கட்சிகள் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தியும், தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு, தேர்தல் அறிக்கை தயாரித்தல் உள்ளிட்ட பணிகளை முடித்து, தீவிர பிரசார பணிகளில் ஈடுபட்டன. தமிழகம் முழுவதும் அரசியல் கட்சி தலைவர்கள் கடும் வெயிலிலும், தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு, பொதுமக்களை சந்தித்து, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தமிழகத்தில் அனல் பறந்த தேர்தல் பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. தேர்தல் பிரசாரம் முடிந்த உடன் அமலுக்கு வரும் விதிகளை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டார்.

தமிழகத்தில் தி.மு.க. தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியும், அ.தி.மு.க. தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணியும் போட்டியிடுகின்றன. இவை தவிர, நாம் தமிழர் மற்றும் த.வெ.க. ஆகிய இரண்டு கட்சிகளும் தேர்தலை தனித்து எதிர்கொள்கின்றன. இதனால், தமிழக சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவுகிறது.

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை காலை தொடங்க உள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக தேர்தல் தொடர்பான நிகழ்வுகளை பார்வையிட 10 நாடுகளை சேர்ந்த 20 பேர் கொண்ட சர்வதேச குழு ஒன்று சென்னைக்கு வருகை தந்துள்ளது.

அவர்களுடன் இந்திய தேர்தல் ஆணையத்தின் 3 பிரதிநிதிகளும் சேர்ந்து, நாளை நடைபெற உள்ள வாக்குப்பதிவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மறுஆய்வு செய்தனர். இதன்படி, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டசபை தொகுதிக்குட்பட்ட என்.கே.டி. நேஷனல் பெண்கள் உயர்நிலை பள்ளிக்கு அவர்கள் அனைவரும் சென்றனர். அப்போது, கோடை வெயிலைதணிக்கும் வகையில், அவர்களுக்கு இளநீர் கொடுக்கப்பட்டது.

என்னுடைய வாக்கு என்னுடைய உரிமை என்ற தலைப்பில் நடந்த இந்த நிகழ்ச்சியில், தமிழக சட்டசபை தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பற்றி அவர்கள் ஆய்வு செய்தனர். இதில் உள்ள நடைமுறைகள், பின்பற்றப்படும் விதிகள் ஆகியவற்றில்கிடைக்கும் அனுபவங்களை பெற்றுக்கொண்டு தங்களுடைய சொந்த நாட்டுக்கு திரும்புவார்கள்.

உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

# 100 சதவீதம் வாக்குப்பதிவை உறுதி செய்யும் நோக்கில் விரிவான விழிப்புணர்வு பேரணி



சேலம், ஏப். 23

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக தேனி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்குப்பதிவை உறுதி செய்யும் நோக்கில் விரிவான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் பணிபுரியும் களப்பணியாளர்கள் இந்த பேரணியில் உற்சாகமாக கலந்து கொண்டு, வாக்களிப்பின் அவசியம், ஒவ்வொரு வாக்கின் மதிப்பு, ஜனநாயகத்தில் பொதுமக்களின் பங்கு ஆகியவற்றை மக்களுக்கு விளக்கும் வகையில் கோஷங்கள் எழுப்பினர்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தேர்தலில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர்.

இந்த பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் ப. ராஜகுமார் தொடங்கி வைத்து, "நூறு சதவீத வாக்குப்பதிவு என்பது ஒரு இலக்கு மட்டுமல்ல, ஜனநாயகத்தின் வலிமையை வெளிப்படுத்தும் முக்கியமான செயலாகும். அனைவரும் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் தொடர்பு அலுவலர் ஏ. எடிசன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் முத்துக்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டு பேரணியை சிறப்பித்தனர்.

### மணப்பாறையில்


# வீட்டின் பூட்டை உடைத்து 40 சவரன் நகைகள் கொள்ளை



திருச்சி, ஏப். 23

திருச்சி மாவட்டம் மணப்பாறை இந்திரா நகரில் வசிக்கும் சேவியர் ஸ்டேன்லி (62) மற்றும் அவரது மனைவி ஸ்டெல்லா மேரி ஆகியோர் கடந்த 16ஆம் தேதி வீட்டைப் பூட்டிவிட்டு சென்னை மகள் வீட்டிற்குச் சென்றனர்.

நேற்று 21ஆம் தேதி வீடு திரும்பியபோது, பின்புறக் கதவை உடைத்து வீட்டிற்குள் புகுந்த மர்ம நபர்கள், அங்கிருந்த சுமார் 40 சவரன் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றது தெரியவந்தது. இதுகுறித்து மணப்பாறை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



### திருச்சி சாரதாஸ் கடையில்

# வருமான வரித்துறையினர் அதிரடிசோதனை

திருச்சி, ஏப். 23

தமிழகம் முழுவதும் உள்ள பல ஜவுளி கடைகளில் வருமான வரித்துறையினர் ஒரே நேரத்தில் சோதனை நடத்தி வருகின்றனர். குறிப்பாக, திருச்சி மற்றும் சென்னையில் உள்ள சாரதாஸ் ஜவுளி கடைகளில் இந்த சோதனை நடைபெற்றது. திருச்சி மலைக்கோட்டை என் எஸ் பி சாலையில் உள்ள சாரதாஸ் ஜவுளி கடையில், துப்பாக்கி ஏந்திய துணை ராணுவப் படை வீரர்களின் பாதுகாப்பில் பத்துக்கும் மேற்பட்ட வருமான வரித்துறையினர் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். இந்த திடீர் சோதனையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# பெண்ணுக்கு பாலியல் தொல்லை அண்ணன், தம்பி போக்சோவில் கைது


சென்னை, ஏப். 23

சென்னையை அடுத்த சோழிங்கநல்லூர் பகுதியை சேர்ந்த 25 வயது பெண் ஒருவர் கண்ணகி நகர் மகளிர் போலீசில் புகார் அளித்தார். அதில், "எனக்கு 15 வயது இருக்கும்போது, டியூசன் சென்ற இடத்தில் இருந்த பிராங்கிளீன் ராஜா என்பவர், காதலிப்பதாக கூறி மிரட்டி பாலியல் தொந்தரவு கொடுத்தார். இதை அவரது சகோதரர் விக்டர் லிபின் ராஜாவிடம் கூறினேன். அவர் தம்பியை அழைத்துகண்டிப்பதற்குபதில், அவரும் எனக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தார்.

ஒருகட்டத்தில் அவர்களிடம் இருந்து விலகி, திருமணம் செய்து தனியாக வசித்து வருகிறேன். சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகு என்னை தவறாக பேசுவதுடன் மீண்டும் என்னை தவறான உறவுக்கு அழைக்கின்றனர். வர மறுத்தால், உன்னுடன் சேர்ந்து இருக்கும் புகைப்படத்தைவெளியிடுவோம்என்றுமிரட்டுகின்றனர்" என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கண்ணகி நகர் மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து, சோழிங்கநல்லூரை சேர்ந்த விக்டர் லிபின் ராஜா (42 வயது), பிராங்கிளீன் ராஜா (38 வயது) ஆகியோரை கைது செய்தனர்.

# அடுத்தடுத்து வெடித்த இரண்டு சிலிண்டர்கள் கடலூரில் பரபரப்பு



கடலூர், ஏப். 23

கடலூர் மாவட்டம் வடலூரை சேர்ந்த முகமது ரபீக். இவரது மனைவி சாரா பீவி. இவர் தனது வீட்டில் வழக்கம் போல சமைத்துக்கொண்டிருந்தார். அப்போது சிலிண்டர் கசிவு காரணமாக ஏற்பட்ட வெடிப்பில் அடுத்தடுத்து இரண்டு சிலிண்டர்கள் வெடித்தன. இதில் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்து சுவர் இடிந்து விழுந்தது. மேலும், இந்த விபத்தில் ரபீக்கின் மனைவி சாரா பீவி பலத்த காயமடைந்தார். தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். மேலும் காயமடைந்த சாரா பீவியை மீட்டு அருகிலுள்ள அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. போலீசார் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இளம்பெண்ணை மிரட்டி ரூ.13 லட்சம் மோசடி

## வாலிபர் கைது

சென்னை, ஏப். 23

திண்டுக்கல் மாவட்டம் வேடச்சந்தூரை சேர்ந்தவர் வினோத் (27 வயது). இவருக்கு சென்னை நங்கநல்லூர் ரகுபதிநகர்பகுதியைசேர்ந்த24வயதுடையபெண்ணுடன் சில ஆண்டுகளுக்கு முன்சமூகவலைதளம்மூலம்பழக்கம் ஏற்பட்டது. பின்னர் இருவரும் நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளனர்.

இந்த நிலையில், வினோத்தின் வங்கி கணக்கின் மூலம் இளம்பெண் தனது தொழில் தொடர்பான பரிவர்த்தனைகளை செய்து வந்ததாக கூறப்படுகிறது. அப்போது அவர் பல தவணைகளாக ரூ.13 லட்சம் வரை வினோத்துக்கு பணம் வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இளம்பெண் பரங்கிமலை போலீஸ் நிலையத்தில் அளித்த புகார் மனுவில், ஆன்லைன் மூலம் ஏற்பட்ட பழக்கத்தை பயன்படுத்தி, வினோத் தன்னிடம் பண மோசடி செய்ததாகவும், தன்னை மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்ததுடன் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டால் என்னுடைய புகைப்படங்களை ஆபாசமாக மார்பிங் செய்து சமூக வலைதளத்தில் வெளியிடுவேன் என அவர் மிரட்டுவதாகவும் தெரிவித்து இருந்தார்.

இது தொடர்பாக பரங்கிமலை மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து வினோத்தை கைது செய்தனர்.

# கணவர் பேசாததால் இளம்பெண் தற்கொலை

கன்னியாகுமரி, ஏப். 23

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை பரம்பின்தலை பகுதியை சேர்ந்தவர் ஸ்ரீகண்டன். இவரது மனைவி உஷா. இவர்களது மகள் நிஷா (19 வயது), கல்லூரி மாணவி. இவரும் அம்சி பகுதியை சேர்ந்த நிஷாந்த் என்ற மணிகண்டன் என்பவரும், கடந்த 3 மாதங்களுக்கு முன்பு காதலித்துதிருமணம்செய்துகொண்டனர்.திருமணத்திற்கு பிறகு நிஷா குழித்துறையில் வேறொரு வீட்டில் கணவருடன் வசித்து வந்தார்.

இந்த நிலையில் நிஷாந்த் வெளியூர் வேலைக்கு சென்றுள்ளார். அப்போது நிஷா, கணவரின் செல்போனை தொடர்பு கொண்டுள்ளார். ஆனால் நிஷாந்த் போனை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. உடனே நிஷா, தனது தாயிடம் தெரிவிக்க அவரும், மருமகனின் செல்போனை தொடர்பு கொண்டுள்ளார். அதற்கும் அவரிடம் இருந்து எந்தவொரு தகவலும் இல்லை. இதனை சற்றும் எதிர்பார்க்காத நிஷா, தான் விரும்பி மணந்த காதலன் தனக்கு உரிய மரியாதையை கொடுக்காமல் அலட்சியப்படுத்துகிறாரோ? என்ற எண்ணத்தில் விரக்தியின் உச்சிக்கே சென்று விட்டார். இதையடுத்து அவர் வீட்டில் உள்ள அறையில் மின்விசிறியில் தூக்கில் தொங்கினார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த உறவினர்கள் உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக குழித்துறை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். மேலும் இதுகுறித்து களியக்காவிளை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். காதல் திருமணம் செய்த புதுப்பெண் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில் தண்ணீர் நிரப்பி தெப்பத் திருவிழாவிற்கு தயாரான தெப்பக்குளம்



சுசீந்திரம்.ஏப்.23

சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில் வருடம் தோறும் தெப்பத் திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம் அதுபோல இந்த ஆண்டு தெப்பத் திருவிழாவிற்காக கடந்த 18ஆம் தேதி காலை 11 மணியளவில் கொடிமர பூஜைகள் செய்து கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது இந்த திருவிழா 10 நாட்கள் வெகு விமர்சையாக நடைபெற உள்ளது தெப்பத் திருவிழா நடைபெறும் தெப்பக்குள தடுப்புச் சுவர் ஏற்கனவே இடிந்து விழுந்த நிலையில் அதனை சரி செய்து தெப்பக்குளத்திற்கு தண்ணீர் வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன கோடை காலம் என்பதால் பழையாற்றில் போதிய தண்ணீர் இல்லை எனவே மோட்டார் பம்புகள் மூலம் சோழன் திட்டை அணையில் இருந்தும் பழைய ஆற்றில் இருந்தும் தண்ணீர் கொண்டுவரப்பட்டது தண்ணீர் வரும் பாதையில் ஆங்காங்கே அடைப்புகள் ஏற்பட்டிருந்தது

அதனை அகற்றி தற்போது தெப்பத் திருவிழாவிற்கான தண்ணீர் நிரப்பி தெப்பத் திருவிழாவிற்கு தெப்பக்குளம் தயார் நிலையில் உள்ளது ஐந்தாம் திருவிழாவான இன்று காலை 5:30 மணி அளவில் அலங்கரிக்கப்பட்ட ரிஷப வாகனத்தில் சுவாமி அம்பாள் தீருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது காலை 10:30 மணிக்கு அபிஷேகம் நடைபெற்றது மாலை 5 முப்பது மணிக்கு ஊஞ்சல் மண்டபத்தில் வைத்து உற்சவ மூர்த்திக்கு அஷ்டாபிஷேகமும் இரவு 9:30 மணிக்கு ரிஷப வாகனத்தில் சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது

ஆறாம் திருவிழாவான நாளை காலை 9 மணிக்கு பூங்கோயில் வாகனத்தில் சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் மாலை ஐந்து முப்பது மணிக்கு மண்டகப்படிக்கு சுவாமி எழுந்தருளல் நிகழ்ச்சியும் இரவு 9:30 மணிக்கு இந்திர வாகனத்தில் சுவாமி எழுந்தருள் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது ஒன்பதாம் திருவிழா அன்று காலை 6:00 மணிக்கு இந்திர வாகனத்தில் மகா விஷ்ணு அம்பாள் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் காலை எட்டு முப்பது மணிக்கு விநாயகர் தேரில் விநாயகரும் சப்பர தேரில் சுவாமியும் அம்மன் தேரில் அம்மனும் அமரச் செய்து பக்தர்கள் தேரை ஒருமுறை கோவிலை சுற்றி வலம் வரும் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது மாலை 6 மணிக்கு சுவாமி மண்டகப்படிக்கு எழுந்தருளல் நிகழ்ச்சியும் இரவு 12 மணிக்கு சப்தாவர்ன காட்சியும் நடைபெறுகிறது பத்தாம் திருவிழா அன்று இரவு 8 மணி அளவில் சுவாமி அம்பாள் பெருமாள் ஆகியோரை அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் வைத்து மூன்று முறை தெப்பக்குளத்தை வலம் வரும் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது இரவு 12 மணிக்கு திரு ஆறாட்டு நடைபெறுகிறது

# திருச்சி லாட்ஜ்களில் போலீசார் தீவிர சோதனை



திருச்சி, ஏப்.23

சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று 21ம் தேதி மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து, வெளியூர் கட்சிக்காரர்கள் யாரும் தொகுதிக்குள் தங்கி இருக்கக் கூடாது என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.

இதன் பேரில், திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் பகுதியில் உள்ள லாட்ஜ்களில் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

தேர்தல் விதிமுறைகளை மீறி யாரேனும் தங்கியுள்ளனரா என்பதை கண்டறிய இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது

# திருச்சி கொலை வழக்கில் தந்தை மகனுக்கு ஆயுள்

திருச்சி, ஏப். 23

முசிறி அருகே திருத்தியமலை பகுதியைச் சேர்ந்த தனபால் ராமசாமி இருவரும் சகோதரர்கள். சொத்து தகராறு மற்றும் முன் விரோதம் காரணமாக ராமசாமி மற்றும் அவரது மகன் ராமச்சந்திரன் ஆகியோர் தனபாலை தாக்கி கொலை செய்தனர். இச்சம்பவம்தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தவழக்குவிசாரணை முடிந்து, நீதிபதி தந்தை மகனுக்கு ஆயுள் தண்டனை மற்றும் தலா 5000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.





# குமரியில் சட்டமன்ற பொதுத்தேர்தல் நடத்தை விதிமுறைகள் செயல்பாட்டின் தகவல்

நாகர்கோவில் ஏப்.23

குமரியில் சட்டமன்ற பொதுத்தேர்தல் நடத்தை விதிமுறைகள் செயல்பாட்டில் இருந்து வருகிறது.

அதனடிப்படையில் மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சாவடி மையத்தினை எளிதில் கண்டறியும் விதமாக வாக்குச்சாவடி நிலைய முகப்பில் ஒவ்வொரு வண்ணத்திலும் வாக்குச்சாவடி மையத்தினை குறிப்பிட்டு, வழிகாட்டி பதாகைகள் வைக்கப்பட்டதோடு, முகப்பிலிருந்து வாக்குச்சாவடி மையம் வரை அந்தந்த நிற வர்ணம் பூசப்பட்டு, அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வாக்காளர்களின் வசதிக்கேற்ப நிழல் பந்தல், குடிநீர், கழிப்பறைகள், கைப்பேசி பாதுாப்பு பை, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் விளையாட்டு பொருட்களுடன் கூடிய தனிப்பகுதி உள்ளிட்டவைகள் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஒரு பெண்கள் வாக்குச்சாவடி மையம், மாற்றுத்திறனாளிகள் வாக்குச்சாவடி மையம், மாதிரி வாக்குச்சாவடி மையம் மற்றும் இளைஞர்களுக்கான வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பத்மநாபபுரம், விளவங்கோடு மற்றும் குளச்சல் ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையத்தில் அமைக்கப்பட்டுள்ள பெண்கள், மாற்றுத்திறனாளி, மாதிரி வாக்குச்சாவடி மையங்களை கலெக்டர் அழகு மீனா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார். வாக்காளர்பெருமக்களாகிய அனைவரும் இன்று (23.04.2026) தவறாமல் வாக்குச்சாவடிக்கு சென்று, தங்கள் வாக்கினை 100 சதவீதம் பதிவு செய்ய வேண்டும் என கலெக்டர் கூறினார். நடைபெற்ற ஆய்வில் அலுவலர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் கோடை உற்சவம் தொடக்கம்

திருச்சி, ஏப். 23

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் நேற்று கோடை திருநாள் உற்சவம் தொடங்கியது. நம்பெருமாள் மூலஸ்தானத்தில் இருந்து புறப்பட்டு கோடை நாலுகால் மண்டபத்தை அடைந்தார். பக்தர்களால் வழங்கப்பட்ட மல்லிகை பூக்களையும் பூப்போர்வையையும் சாற்றி நம்பெருமாள் எழுந்தருளினார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

# கோவில் குளத்தில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

காஞ்சிபுரம், ஏப். 23

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த மாம்பாக்கம் தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர் ராம்கி. இவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.மகள்ஜனதுவிசா,மகன்நிதிர்ஷன்(வயது5).

நேற்று காலை ஜனதுவிசா, நிதிர்ஷன் ஆகியோர் பக்கத்து வீட்டை சேர்ந்த தோழி மற்றும் அவரது பாட்டியுடன் குடியிருப்புக்கு அருகில் உள்ள பொன்னியம்மன் கோவில் குளத்திற்கு சென்றனர். அப்போது குளத்தில் உள்ள தாமரை பூவை பறிக்க ஜனதுவிசா, அவரதுதம்பிநிதர்ஷன்ஆகிய இருவரும் தண்ணிரில்இறங்கியதாகதெரிகிறது.இதில்அவர்கள் 2 பேரும் தண்ணீரில் மூழ்கினர்.

இதனை கண்டு கரையில் இருந்தவர்கள் கூச்சலிட்டனர். சத்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் தண்ணீரில் மூழ்கிய ஜனதுவிசா, நிதிர்ஷன் ஆகிய 2 பேரையும் மீட்டு ஸ்ரீபெரும்புதூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றிசிறுவன்நிதர்ஷன்பரிதாபமாகஇறந்தான். அவரது அக்காள் ஜனதுவிசாவுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து ஸ்ரீபெரும்புதூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருச்சி அருகே

# அழுகிய நிலையில் மூதாட்டி சடலம் மீட்பு

திருச்சி, ஏப். 23

திருச்சி இனாம் குளத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பூலாங்குளத்துப்பட்டியில் உள்ள காப்புக்காடு பகுதியில் அழுகிய நிலையில் மூதாட்டி சடலம் கண்டெடுக்கப்பட்டது.

போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து உடலை மீட்டு பிரேதபரிசோதனைக்காகஅனுப்பி வைத்தனர்.

விசாரணையில் உயிரிழந்தவர் காந்திநகர் பகுதியைச் சேர்ந்த பெருமாள் என்பது தெரியவந்தது. பிரேத பரிசோதனைக்குப் பிறகு, போலீசார் உடலை அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தனர். இது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கோவை தெற்கு தொகுதியில்

# வாக்காளர்களுக்கு திமுகவினர் பணம் கொடுக்கின்றனர்

## அதிமுக வேட்பாளர் தர்ணா



கோவை, ஏப்.23

தமிழக சட்டசபை தேர்தல் நாளை நடைபெற உள்ளது. தேர்தலுக்கான ஆயத்தப்பணிகளைதேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தி வருகிறது.

அதேவேளை, தேர்தலில் வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியினர் பணம் , பரிசுப்பொருட்கள் பட்டுவாடா செய்தவாக தொடர் குற்றச்சாட்டு எழுந்து வருகிறது. இது தொடர்பாக அரசியல் கட்சியினர் தொடர்புடைய நபர்கள், இடங்களில் இருந்து லட்சக்கணக்கில் பணம் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கோவை தெற்கு தொகுதியில் வாக்காளர்களுக்கு திமுகவினர் பணம் கொடுப்பதாக அதிமுக வேட்பாளர் அம்மன் அர்ஜுனன் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டரிடம் அவர் இன்று புகார் அளித்தார்.

அதேவேளை, திமுகவினர் பணம் பட்டுவாடா செய்தது தொடர்பாக புகார் அளித்தபோதும் தேர்தல் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக்கூறி அதிமுக வேட்பாளர் அம்மன் அர்ஜுனன் கோவை கலெக்டர் அலுவலகத்தில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இதனால் கலெக்டர் அலுவலகத்தில் பரபரப்பான சூழ்நிலை நிலவுகிறது. கோவை தெற்கு தொகுதியில் திமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி களமிறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## துறையூர் அருகே

# காதல் திருமணம் செய்த பெண் தற்கொலை

திருச்சி, ஏப். 23

துறையூர் அருகே ரெட்டியார்பட்டியைச் சேர்ந்த ஷாலினி (25) என்பவர், வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த பொன்னாரைக் காதலித்து ஓராண்டுக்கு முன் திருமணம் செய்துகொண்டார். பொன்னார் திருச்சியில் ஹோட்டலில் பணிபுரிகிறார். நேற்று, பொன்னாரின் தாய் வெள்ளையம்மாள் விவசாயப் பணிக்காக வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பியபோது, ஷாலினி வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாகக் கிடந்துள்ளார்.



புளியங்குளம் போலீஸார் இதுகுறித்து வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## துறையூரில்

# வாக்குப்பதிவு இயந்திரங்களை அனுப்பும் பணி தீவிரம்

திருச்சி, ஏப். 23

துறையூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 297 வாக்குப்பதிவு மையங்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நகராட்சி அலுவலகத்திலிருந்து தனித்தனி வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. தேர்தல் நடத்தும் அலுவலர் மணிமாறன் தலைமையில் தேர்தல் அலுவலர்கள் இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றனர். இது தேர்தல் பணிகளின் முக்கிய கட்டமாகும்.

## திருச்சி அருகே

# பைக்கில் மோதி விபத்து முதியவர் பலி

திருச்சி, ஏப். 23

மணச்சநல்லூர்அருகே சிறுகாம்பூரைச் சேர்ந்த சீனிவாசன், சோழங்க நல்லூர் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, அதே பகுதியைச் சேர்ந்த இளையராஜாவின் பைக் மோதி விபத்துக்குள்ளானதில் பலத்த காயமடைந்தார். ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவரை பரிசோதித்த மருத்துவர்கள் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இது குறித்து வாத்தலை போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சமயபுரம் அருகே

# கார் மோதி பைக்கில் வந்தவர் பலி

திருச்சி, ஏப். 23

திருச்சி மாவட்டம் லால்குடி நரிமேடு பகுதியைச் சேர்ந்த இருதயராஜ், சமயபுரம் டோல் பிளாசா அருகே சாலையை கடக்க முயன்றபோது, மற்றொரு இருசக்கர வாகனம் மோதி கீழே விழுந்தார். இதைத் தொடர்ந்து, பின்னால் வந்த டாடா ஏஸ் வாகனம் அவர் மீது ஏறி இறங்கியதில், தலையில் பலத்த காயமடைந்த இருதயராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சமயபுரம் போலீசார் அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்து, விபத்தை ஏற்படுத்திய டாடா ஏஸ் வாகன ஓட்டுநர் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஞானசேகரன் என்பவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கோவில்பட்டி

# டேங்கர் லாரி மீது ஆம்னி பேருந்து மோதி விபத்து 20 பேர் படுகாயம்



கோவில்பட்டி , ஏப். 23

கோவையில் இருந்து நேற்று தனியார் ஆம்னி பேருந்து ஒன்று பயணிகளை எற்றி கொண்டு நாகர்கோவில் நோக்கி வந்து கொண்டிருந்தது. இன்று கோவில்பட்டி அருகே மூப்பன்பட்டியில் வந்தபோது சாலையில் நின்று கொண்டு இருந்த சிமெண்ட் கலவை டேங்கர் லாரி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஆம்னி பேருந்தின் முன்பகுதி முற்றிலும் சேதமடைந்தது. இந்த விபத்தில் பேருந்தின் ஓட்டுநர், 8 பெண்கள் மற்றும் ஒரு குழந்தை உட்பட 20 பயணிகள் படுகாயம் அடைந்துள்ளனர். ஓட்டுனர் உடுமலைபேட்டையைச் சேர்ந்த சரவணன் இடிபாடுகளில் இருந்து வெளியே வர முடியாமல் சிக்கிக் கொண்டார். இந்த சம்பவம் தொடர்பாக தகவல் கிடைத்த உடன் கோவில்பேட்டி தீயணைப்புப்படையினர் விரைந்து வந்து இடிபாடுகளில் சிக்கிய ஓட்டுனரை மீட்டனர். காயமடைந்த அனைவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மூன்று பேர் மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த விபத்து காரணமாக தேசிய நெடுசாலையில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கோவில்பட்டி கிழக்கு போலீசார் விரைந்து வந்து போக்குவரத்தை சீர் செய்தனர். மேலும் இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



## திருச்சி மேற்கு தொகுதியில்

# வாக்கு பெட்டிகள் அனுப்பி வைப்பு

திருச்சி, ஏப். 23

திருச்சியில் வாக்குப்பதிவு இயந்திரங்கள், விவிபேட் மற்றும் கட்டுப்பாட்டு கருவிகள் வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பும் பணி தொடங்கியுள்ளது.

மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து மேற்கு தொகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு போலீஸ் பாதுகாப்புடன் வாகனங்களில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனுப்பப்படுகின்றன.

இந்த பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## மணப்பாறை

# கள்ளச்சந்தையில் மதுவிற்ற 3 பேர் கைது

மணப்பாறை, ஏப்.23



மணப்பாறை நகரப் பகுதிகளில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை நடைபெறுவதாக வந்த புகாரைத் தொடர்ந்து, காவல் கண்காணிப்பாளர் தனிப்படையினர் நடத்திய சோதனையில் நொச்சிமேடு, பொன்முச்சந்தி பகுதிகளில் மது விற்ற தொட்டியபட்டியைச்சேர்ந்த சிவபாலகுமாரன், ஆனம்பட்டியைச் சேர்ந்த துரைகண்ணு, ராஜாலிப்பட்டியைச் சேர்ந்த சின்னசாமி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு,நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

மயிலாப்பூர்

# திமுக வேட்பாளரின் உதவியாளர் வீட்டில் கட்டுக்கட்டாக பணம் பறிமுதல்



சென்னை, ஏப். 23

தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு இன்று (வியாழக்கி ழமை) நடக்கிறது. இதையொட்டி வாக்காளர்களுக்குபணம்,பரிசுபொருட்கள்பட்டுவாடா செய்வதை தடுக்க பறக்கும் படையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், மயிலாப்பூர் தொகுதி திமுக வேட்பாளர் தா. வேலுவின் தனி உதவியாளராக இருப்பவர் சத்தியமூர்த்தி. இவரது வீட்டில் வாக்களர்களுக்கு பட்டுவாடா செய்ய பணம் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தேர்தல் அதிகாரிகளுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில், தேர்தல் பறக்கும் படையினர் சத்தியமூர்த்தியின் வீட்டில் இன்று அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது வீட்டில் ஒரு பேக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 ரூபாய் நோட்டுக் கட்டுகளை பறிமுதல் செய்தனர். மொத்தம் ரூ. 2 கோடி ரொக்கம் இருக்கும் என கூறப்படுகிறது. பணத்தை எண்ணுவதற்காகப் பிரத்யேக இயந்திரங்களை அதிகாரிகள் கொண்டு வந்தனர். பணம் மட்டுமின்றி, அந்த வீட்டில் இருந்து வாக்காளர் பட்டியல்கள், சில முக்கிய டைரிகள் மற்றும் தேர்தல் தொடர்பான ரகசிய ஆவணங்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கட்சி நிர்வாகிகளுக்கு பணம் விநியோகம் செய்ததற்கான ஆதாரங்கள் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுதொடர்பாக தேர்தல் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இன்று தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், திமுக வேட்பாளரின் உதவியாளர் வீட்டில் கட்டுக்கட்டாக பணம் சிக்கியுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் மயிலாப்பூர் தொகுதியில் மட்டுமின்றி தமிழக அரசியல் வட்டாரத்திலும்பெரும்பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

# கடலூரில் மது போதையில் மாமனார், மாமியாரை கத்தியால் குத்திய மருமகன்



கடலூர், ஏப். 23

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அடுத்த கார்குடல் கிராமத்தை சேர்ந்த கனிமொழி. இவருக்கும் வடபாதியை சேர்ந்த காந்தி என்பவருக்கும் கடந்த 11 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. காந்தி, கனிமொழி தம்பதிக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

இதனிடையே, மதுபோதைக்கு அடிமையான காந்தி அடிக்கடி குடித்துவிட்டு கனிமொழியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். மேலும், கனிமொழி நடத்தையில் காந்திக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை கனிமொழியிடம் காந்தி மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இதனால் கனிமொழி தனது குழந்தைகளை அழைத்துக்கொண்டு கார்குடல் கிராமத்தில் உள்ள தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

வீட்டில் மனைவி இல்லாததை அறிந்த காந்தி மது போதையில் மாமனார் வீட்டிற்கு சென்றுள்ளார். மாமனார் வீட்டிற்கு சென்ற காந்தி அங்கு வைத்து மாமனார் செல்வமணியிடம் மதுபோதையில் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். காந்தியை செல்வமணி சமாதானப்படுத்த முயன்றுள்ளார்.

அப்போது ஆத்திரமடைந்த காந்தி தான் மறைத்து கொண்டு வந்த கத்தியால் மாமனார் செல்வமணியை சரமாரியாககுத்தினார். இதைக்கண்டுஅதிர்ச்சியடைந்த செல்வமணியின் மனைவி லதா தாக்குதல் நடத்திய மருமகன் காந்தியை தடுக்க முயன்றார்.

ஆனால் மதுபோதையில் இருந்த காந்தி தனது மாமியார் லதாவையும் கத்தியால் சரமாரியாக குத்தினார். பெற்றோரை தனது கணவன் கத்தியால் குத்தியதை கண்டு அதிர்ச்சியடைந்த கனிமொழி பக்கத்து வீட்டிற்குள் புகுந்து உயிர் தப்பினார்.

அதேவேளை, கத்திக்குத்து தாக்குதலில் செல்வமணி, லதா படுகாயமடைந்த நிலையில் அவர்களின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் விரைந்து சென்றனர். அப்போது வீட்டிற்குள் இருவரும் ரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளனர்.

உடனடியாக இருவரையும் மீட்ட அக்கம்பக்கத்தினர் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமத்தனர்.

அங்கு இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் மருமகன் கத்தியால் குத்தியதில் படுகாயமடைந்த செல்வமணி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். செல்வமணியின் மனைவி லதாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார், மாமனாரை கத்தியால் குத்திக்கொலை செய்துவிட்டு தப்பியோடிய காந்தியை தீவிரமாக தேடி வருகின்றனர். மனைவி நடத்தையில் சந்தேகமடைந்து வாக்குவாதத்தில் ஈடுபட்ட மதுபோதையில் மாமனர், மாமியாரை இளைஞர் கத்தியால் குத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில் இருந்து

# 1.88 லட்சம் பேர் சிறப்பு பஸ்களில் சொந்த ஊர்களுக்கு பயணம்



சென்னை, ஏப். 23

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நாளை நடைபெறுகிறது. இதையொட்டி அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் நேற்று முதல் இயக்கப்பட்டன. சென்னையில் பல்வேறு பகுதியில்தங்கி தொழில் மற்றும் வேலை செய்து வரும் மக்கள் ஓட்டுப் போட சொந்த ஊர்களுக்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்றிரவு சென்னையில் இருந்து 1,88,705 பேர் சிறப்புபஸ்களில்சொந்த ஊர்களுக்கு பயணம் செய்துள்ளனர். சென்னையில் இருந்து பல்வேறுஊர்களுக்கு நேற்று மட்டும் 3,431 பஸ்கள் இயக்கப்பட்டுள்ளன. இன்று 3,570 சிறப்பு பஸ்களும் நாளை மதியம் ஒரு மணி வரை 600 சிறப்பு பஸ்களும் சென்னையில் இருந்து பல்வேறு நகரங்களுக்கு இயக்கப்படுகிறது.

கோயம்பேடு, கிளாம்பாக்கம், மாதவரம் ஆகிய பஸ் நிலையங்களில் இருந்து இந்த சிறப்பு பஸ்கள் இயக்கப்பபடுகின்றன. நாளை சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் சென்னை உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து சொந்த ஊருக்கு மக்கள் படையெடுத்துள்ளனர்.

சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு செல்லும் ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதால் மக்கள் அவதி அடைந்துள்ளனர். சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்ல இரண்டு சிறப்பு ரெயிலும், கோவைக்கு ஒரு சிறப்பு ரெயிலும் இன்று கூடுதலாக இயக்கப்படுகிறது.

# தஞ்சாவூர் பெரிய கோவில் சித்திரை திருவிழா தேரோட்டம்

## 27ஆம் தேதி உள்ளூர் விடுமுறை: கலெக்டர் தகவல்

தஞ்சாவூர் ஏப்ரல் 23

தஞ்சாவூர் பெரிய கோவில் சித்திரை திருவிழா தேரோட்டத்தை யொட்டி வருகிற 27ஆம் தேதி திங்கட்கிழமை தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்க ப்படுகிறது என கலெக்டர் பிரியங்கா பங்கஜம் அறிவித்துள்ளார்



இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தி கூறியிருப்பதாவது :

தஞ்சாவூர் பெரிய கோவில் சித்திரை தேரோட்டத்தை முன்னிட்டு 27ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட த்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அறிவித்து ஆணையிடப் படுகிறது

இந்த உள்ளூர் விடுமுறை நாளுக் கு பதிலாக அடுத்த மாதம் மே 9ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங் களுக்கும்கல்விநிறுவனங்களுக்கும் பணி நாளாக அறிவிக்கப்ப டுகிறது.

இந்த உள்ளூர் விடுமுறை செலாவணி முறிச் சட்டம் 1881 ன் கீழ் வராது என்பதால் தஞ்சாவூர் மாவட்ட கருவூலம் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை கருவூலங்களும் குறிப்பிட்ட பணியாளர்களுடன் இயங்கும். மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது



## தஞ்சாவூர். திருவையாறு, ஒரத்தநாடு தொகுதிகளுக்கான

# வாக்கு எண்ணும் மையத்தில் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆய்வு

தஞ்சாவூர் ஏப்ரல் 23

தஞ்சாவூர் திருவையாறு ஒரத்தநாடு தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்டசபை தொகுதிகள் உள்ளன. இவற்றில்தஞ்சாவூர்ஒரத்தநாடு திருவையாறு ஆகிய சட்டசபை தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை தஞ்சாவூர் குந்தவை நாச்சியார்அரசு கலை கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் நடக்கிறது

பட்டுக்கோட்டை , பேராவூரணி சட்டசபை தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை பட்டுக்கோட் டை அரசு மாதிரி மேல் நிலைப்பள்ளி வாக்கு எண்ணும் மையத்திலும, திருவிடைமருதூர் கும்பகோணம், அரசினர் கலை கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் நடக்கிறது

இதற்கிடையில்தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசு மகளீர் கலைக்கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் மேற்கொள்ள ப்பட்டுவரும் அடிப்படை மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர், மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பு அறையையும் வாக்கு எண்ணும் மையத்தில் அனைத்து தேவையான தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளனதையும், அனைத்து வாக்கு எண்ணும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளதையும் மின் விளக்கு வசதிகள் செய்யப் படடுள்ளதையும் பார்வையிட்டார்

மேலும் அவர் குடிநீர் வசதிஉள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்படவேண்டும். ஊடக மைய த்திற்கான வசதிகள் கட்டுப்பாட்டு அறைக்கான பணிகளை விரைந்து முடித்த வேண்டும் என சம்பந்தப் பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத் தினார் .இந்த ஆய்வின் போது மாவட்ட போலீஸ் சூப்பிர ண்டு சுந்தரவதனம் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 8 சட்டசபை தொகுதிகளில் 4 ஆயிரம் போலீசார் தேர்தல் பாதுகாப்பு பணி

## 84 வாக்குச் சாவடிகள் பதற்றமான வை என அறிவிப்பு



தஞ்சாவூர் ஏப்ரல் 23

தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்டசபை தொகுதிகளில் 4000 போலீசார் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடு படுகின்றனர். 84 வாக்குச்சாவடிகள் பதட்டமானவையாகும்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்டச பை தொகுதிகள் உள்ளன. தஞ்சாவூர் சட்டசபை தொகுதியில் 309 வாக்குச்சாவடிகளுக்கு360மின்னவணு வாக்குப்பதிவுஎந்திரங்களும் திருவையாறு சட்டசபை தொகுதி யில் 338 வாக்கு சாவடிகளுக்கு 405 மின்னணுவாக்கு ப் பதிவு எந்திரங்க ளும் ஒரத்தநாடு தொகுதியில் 314 வாக்கு சாவடிகளுக்கு 376 மின்ன ணு எந்திரங்களும் பட்டுக்கோட்டை தொகுதியில் 310 வாக்கு சாவடிகளுக்கு 372 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களும் பேராவூரணி தொகுதிக்கு 284 வாக்குச்சாவடிக்கு 340 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களும் அனுப்பிடவும்

அதே போல் கும்பகோணம் தொகுதியில் 300 வாக்குச் சாவடிகளுக்கு 360 மின்னணு வாக்கு பதிவு எந்திரங்களும் திருவிடைமருதூர் தொகுதியில் 326 வாக்குச் சாவடி களுக்கு 391 மின்னணு வாக்கு பதிவு எந்திரங்களும் பாபநாசம் தொகுதியில் 315 வாக்குச்சாவடிக ளுக்கு 378 வாக்குப் பதிவு எந்திரங்களும்அனுப்பிவைக்கப்பட்டது தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் 8 தொகுதிகளில் 2496 வாக்குசாவடி மையங்களில் 2982 மின்னணு வாக்கு பதிவு எந்திரங்கள் பயன் படுத்தப்படவும் . 3242 ஒப்புகை சீட்டை காட்டும் எந்திரங்களும் பயன் படுத்தப் படவும் உள்ளது மாவட்டம் முழுவதும் 84 வாக்கு சாவடி மையங்கள் பதற்றமான யாக கண்டறியப்பட்டுள்ளதால் அங்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது .தேர்தல் பாதுகாப்பு பணியில் மாவட்டம் முழுவதும் 4 ஆயிரம் போலீஸாரும் 500 மத்திய துணை ராணுவத்தினதினரும் 12 ஆயிரத்து 281 தேர்தல் பணியாளர்கள் ஈடுபட உள்ளனர். மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள்எடுத்துசெல்லகூடிய வேன்கள்தஞ்சாவூர் ஆயுதப்படை மைதானத்தில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது

இந்தவேன்களில்ஜி.பி.எஸ் கருவிகள் பொருத்தப்பட்டன. இவற் றை மாவட்ட கலெக்டா பிரியங்கா பங்கஜம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் 8 தொகுதி களிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபடக் கூடிய போலீஸார் ஓய்வு பெற்ற போலீஸார் முன்னாள் ராணுவ வீரர்கள் என ஏராளமானோர் தஞ்சாவூர் ஆயுதபடை மைதானத்திற்கு வந்திருந்தனர் இவற்றை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தர வதனம் பார்வையிட்டார்.

# தேர்தல் நாளன்று தேவைப்படக் கூடிய மாற்றுத்திறனாளிகள், முதியோர் வாக்களிக்க அரசு வாகனம்; கலெக்டர் தகவல்

தஞ்சாவூர் ஏப்ரல் 23

தஞ்சாவூர் மாவட்ட தேர்தல் அலுவ லரும் கலெக்டர்மான பிரியங்கா பங்கஜம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் 23ந்தேதி வியாழக்கிழமை நடை பெறுகிறது. தஞ்சாவூர் மாவட்டத் தில் 8 சட்டசபை தொகுதிகளிலும் உள்ள அனைத்து வாக்குச்சாவடி நிலையங்களிலும் காலை 7:00 மணி முதல் மாலை 6.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது அனைத்து வாக்குச்சாவடிகளிலும் பொதுமக்கள் வாக்களிக்க ஏதுவாக பல்வேறு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது மேலும் வாக்குப்பதிவு நாளன்று போக்கு வரத்து வசதி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள், முதியோர் 1950 என்ற உதவி எண் அல்லது மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு 18004259464 என்ற கட்டணம் இல்லை எண்ணை தொடர்பு கொண்டு வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடி விவரம், வசிப்பிட முகவரியை வழங்கினால் அந்தந்த தேர்தல் நடத்துமம் அலுவலர்களால் அரசு வாகனம் மூலம் உரிய போக்கு வரத்து வசதி ஏற்படுத்தப்படும். மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது

# வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் நுண்பார்வையாளர்களுக்கு 3ம் கட்டமாக கணினி மூலம் சுழற்சி முறையில் தேர்வு செய்யும் பணிகள்

நாமக்கல், ஆக. 23

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் துர்கா மூர்த்தி, தலைமையில் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் எம். அன்கித்குமார் அகர்வால், மனோஜ் புஷ்ப், சஞ்சய் லாலாசாஹிப் யாதவ் ஆகியோர் முன்னிலையில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் நுண்பார்வையாளர்களுக்கு மூன்றாம் கட்டமாக கணினி மூலம் சுழற்சி முறையில் தேர்வு செய்யும் பணி நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி தலைமையில், வாக்குப்பதிவு நாள் அன்று ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் பணியாற்ற உள்ளதலா ஒரு முதன்மை அலுவலர் மற்றும் மூன்று நிலைகளிலான வாக்குச்சாவடி அலுவலர்கள் என 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ள 8544 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும்,

பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்காணிக்க நியமிக்கப்பட்டுள்ள 70 நுண்பார்வையாளர்களுக்கும் மூன்றாம் கட்டமாக கணினி மூலம் சுழற்சி முறையில் தேர்வு செய்யும் பணி நடைபெற்றது.

தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் துர்கா மூர்த்தி, சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள தன்னார்வலர்களின் ஒருங்கிணைப்பாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். மேலும், கூலிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில்தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, பசுமை மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டு வருவதையும், சேந்தமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில், வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான பொருட்கள் அனுப்பி வைப்பது தொடர்பாகவும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளில் துணை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) ம.கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வ.சந்தியா, சேந்தமங்கலம் தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் ஆ.கற்பகம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.